[2022 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் கால்நடை மருத்துவர்கள் நியமனம் சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் நீதிமன்றத்தில் நடந்துவந்தன. தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் அந்த வழக்குகள் நடத்தப்பெற்று, 1,089 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் தற்போது மருத்துவர்களே இல்லை என்ற நிலைமை இல்லாத வகையில், கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்திருக்கின்றோம். கால்நடை உதவியாளர்களும் தேர்வு செய்யப்பட்டு வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலும் அதுபோன்ற நிலை இருக்குமேயானால், உடனடியாக அதற்குரிய நடவடிக்கைகளை எங்கள் துறையின்மூலம் எடுப்போம் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 237, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**237—**

**புதைவடங்கள்**

***3695—திரு. ப. கார்த்திகேயன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் தொகுதி, தோட்டப்பாளையம், மண்டி தெரு, காந்தி சாலை, மூங்கில் மண்டி வீதி மற்றும் அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் உள்ள உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*வேலூர் தொகுதி, தோட்டப்பாளையம், மண்டி தெரு, காந்தி சாலை, மூங்கில் மண்டி வீதி மற்றும் அண்ணா சாலை ஆகிய பகுதிகளில் உள்ள உயரழுத்த மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

**திரு. ப. கார்த்திகேயன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலனையில் இல்லை என்று சொல்கிறார்கள். சித்ரா பௌர்ணமி அன்று 8 புஷ்பப் பல்லக்குகள் வருகின்றன. அவற்றைக் குறித்து சொல்ல வேண்டுமென்றால், துர்க்கையம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. தோட்டப்பாளையம், தர்மராஜா கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. மண்டித் தெருவிற்கு சேம்பாக்கம் செல்வ விநாயகர் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. வாணியர் தெரு, பிள்ளையார் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. மண்டித் தெரு பூக்கடை பல்லக்கின் சார்பில் பெருமாள் கோயில் தெருவிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதேபோல, பூக்காரத் தொழிலாளர்களின் சோலாபுரியம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதேபோல, வேலப்பாடியிலுள்ள கருமாரியம்மன் கோயிலிலிருந்து ஒரு புஷ்பப் பல்லக்கு வருகிறது.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், எல்லா ஊர்களில் இருந்தும் புஷ்பப் பல்லக்குகள் வருகின்றன. அங்கு என்ன வேண்டுமென்ற கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. ப. கார்த்திகேயன்:** *சிறப்புமிக்க கோட்டைக் கோயிலிலிருந்து ஜலகண்டேஸ்வரர் புஷ்பப் பல்லக்கு வருகிறது. அதனால்* underground cable *அமைத்துத்தர வேண்டுமென்று, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன்.*

[2022 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய அனைத்துப் பகுதிகளிலும் மேல்நிலை மின்கம்பிப் பாதைகளை புதைவடங்களாக மாற்றியமைத்து அந்தப் பணிகளை 100 சதவிகிதம் நிறைவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். பெரம்பூர், தாம்பரம், ஆவடி, அடையாறு, IT corridor ஆகிய 5 கோட்டங்களில் இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் பணிகள் இறுதி செய்யப்படுகின்றன. அடுத்த ஆண்டிற்கு 7 கோட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, முதற்கட்டமாக சென்னை மாநகராட்சி முழுவதும் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டபிறகு, மற்ற மாநகராட்சிகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, படிப்படியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதிகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

**திரு. ப. கார்த்திகேயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் தொகுதியில் இருக்கிற Division office–ஐ மாற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது வேலூரிலேயே தொடர்ந்து இருந்து, வேலூர் மக்கள் பயனடைய உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதல்வராக இருந்த காலத்தில்தான், 2006–2011–ல், வேலூரில் பெரிய அளவில் நிறைய மாற்றங்கள் உருவாக்கப்பட்டன. ஆகவே, தற்போது அவசியம் இந்த Underground cable–களை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*2022 மே 6]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் Division office அந்த இடத்தில் செயல்படுவதில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்; அவருக்கு நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான். வரக்கூடிய ஆண்டுகளில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ் அவர்கள்.*

**திரு. க. செல்வராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரத்திற்குத் தடையில்லா மின்சாரம் கிடைக்கும் வகையில், திருப்பூர் மின் பகிர்மான வட்டத்தில் கூடுதலாக துணை மின் நிலையங்கள் அமைக்கப்படுமா என்பதையும், மேலும், திருப்பூர் தெற்கு வளையக்காடு வி.பி. சிந்தன் நகரில் 3 வீதிகளில் உயர் மின்னழுத்தக் கம்பிகள் குடியிருப்புகளுக்கு இடையூறாக உள்ளன. இவற்றை மாற்றியமைக்க பொது மக்கள் சார்பில் இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 121 ரூபாய் இரண்டு மாதங்களுக்கு முன்பு வங்கி வரைவோலைமூலம் அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், மேலும், வீடுகளில், குடிசைப் பகுதிகளில் பாத்திரத் தொழில் செய்பவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் 14 இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். எனவே, அந்தப் பணிகளோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதிகளும் ஆய்விற்கு

எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும், அவர் கூறிய மற்ற கருத்துகள் பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வி.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில் கீழ்வேளூர், கீழையூர், புதுச்சேரி, சோழஉத்தியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிதாக மின்மாற்றிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 24,036 மின்மாற்றிகள் அமைக்கப்பட்ட நிலையில், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின் இந்த ஆண்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**238—**

## நவீன தங்கும் விடுதி

***3230—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?